# அம்னோவை வலுப்படுத்த எந்தவிதமான தீர்மானத்தையும் ஏற்றுக்கொள்ளத் தயார்

## ஸாஹிட் உறுதி



கோலாலம்பூர், டிச. 13-
அடுத்தாண்டு நடைபெறவிருக்கும் அம்னோ பொதுப்பேரவையில் கட்சியை வலுப்படுத்துவதற்குக் கொண்டுவரப்படும் எந்தவிதமான தீர்மானத்தையும் ஏற்றுக்கொள்ள கட்சி தயாராக உள்ளதாக அதன் தலைவர் டத்தோஸ்ரீ டாக்டர் அமாட் ஸாஹிட் ஹமிடி கூறினார்.

நடந்து முடிந்த 15ஆவது பொதுத்தேர்தலில் அம்னோ படுதோல்வி அடைந்து மக்களின் ஆதரவும் குறைந்து அம்னோ மிகவும் வலுவிழுந்த நிலையில் உள்ளது. அம்னோவை மேலும் வலுப்படுத்த அம்னோ பேராளர்கள் கொண்டுவரும் எத்தகைய தீர்மானத்தையும் பெருமனத்துடன் ஏற்றுக்கொள்ள கட்சி தயாராக உள்ளதாக அவர் தெரிவித்தார்.

அடுத்தாண்டு நடைபெறவிருக்கும் அம்னோ பொதுப்பேரவையில் அம்னோ தலைவர், துணைத்தலைவர் பதவிகளுக்குப் போட்டி இருக்கக்கூடாது என டத்தோஸ்ரீ ஜமால் வலியுறுத்தியுள்ளது குறித்து கருத்துரைக்குமாறு அவரிடம் கேட்டபோது அமாட் ஸாஹிட் இவ்வாறு சொன்னார்.

அம்னோவை ஒழித்துக்கட்ட வேண்டும் என்பதற்காகவே பெர்சத்து கட்சிக்கு உயிரூட்ட சில தரப்பினர் முயன்று வருவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார். அம்னோ உறுப்பினர்களிடையே பல்வேறு பிளவுகளை ஏற்படுத்த முயலும் நடவடிக்கைகளை அம்னோ உறுப்பினர்கள் எதிர்கொண்டு நிற்க வேண்டும் என்று துணைப்பிரதமருமான அவர் கேட்டுக்கொண்டார்.

### அம்னோ தலைவர், துணைத்தலைவர் பதவிகளுக்குப்

# போட்டி இருக்கக்கூடாது



கோலாலம்பூர், டிச. 13-
அம்னோ தலைவர், துணைத்தலைவர் பதவிகளுக்குப் போட்டி இருக்கக்கூடாது என சிலாங்கூர் மாநில தேசிய முன்னணியின் தகவல் பிரிவுத் தலைவர் டத்தோஸ்ரீ ஜமால் முகமட் யூனுஸ் வலியுறுத்தினார்.

காரணம் அம்னோ இப்போது மிகவும் செயலிழந்த நிலையிலும் நிலையற்ற நிலையிலும் உள்ளதால் அவ்விரு பதவிகளுக்கும் போட்டி ஏற்படுவதை நாம் தவிர்க்க வேண்டும் என அவர் கூறினார்.

அம்னோவில் ஜனநாயகம் இருந்தாலுங்கூட கட்சிப் பதவிகளில் ஏற்படும் போட்டிகளினால் ஏற்படும் தோல்விகளால் பல்வேறு தரப்பினர் அதிருப்தி கொள்ளும் வேளையில் கட்சியில் பெரும் பிளவுகளை ஏற்படுத்திவிடும் என நேற்று வெளியிட்ட ஓர் அறிக்கையில் கூறினார்.

அவர் யாரைக் குறிப்பிட்டுச் சொல்கிறார் என்பது தெரியாவிட்டாலுங்கூட கடந்த 2018ஆம் ஆண்டில் ஏற்பட்ட அம்னோ தலைவர் போட்டியில் பல்வேறு குளறுபடிகளும் பிளவுகளும் ஏற்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த 2018ஆம் ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்ற அம்னோ தேர்தலில் டத்தோஸ்ரீ அமாட் ஸாஹிட் ஹமிடியை எதிர்த்து கைரி ஜமாலுடின் போட்டியிட்டுத் தோல்வி கண்டார். இம்மாதம் 21ஆம் தேதி முதல் 24ஆம் தேதி வரை நடைபெறவிருந்த அம்னோ பொதுப்பேரவை அடுத்தாண்டு ஜனவரி 11ஆம் தேதி முதல் 14ஆம் தேதி வரை ஒத்திவைக்கப்படுவதாக அம்னோ தலைமைச் செயலாளர் டத்தோஸ்ரீ அமாட் மஸ்லான் கடந்த வாரம் கூறியிருந்தார்.

அம்னோ பொதுப்பேரவை பள்ளி விடுமுறைக் காலத்தில் நடைபெற வேண்டும் என்பதற்காகவே இது ஒத்திவைக்கப்படுவதாக அவர் விளக்கம் அளித்திருந்தார்.



### அமாட் ஸாஹிட்டை எதிர்த்துப் போட்டியிடுவதா?

# இன்னும் முடிவு செய்யவில்லை

## – கைரி ஜமாலுடின்

புத்ராஜெயா, டிச. 13-
அடுத்தாண்டு ஜனவரியில் நடைபெறவிருக்கும் அம்னோ பொதுப்பேரவையில் அதன் தலைவர் டத்தோஸ்ரீ அமாட் ஸாஹிட் ஹமிடியை எதிர்த்து போட்டுயிடுவதா? இல்லையா என்பதைத் தாம் இன்னும் முடிவுசெய்யவில்லை என்று ரெம்பாவ் தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கைரி ஜமாலுடின் கூறினார்.

நாம் இதனைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என்று அவர் சொன்னார். அடுத்தாண்டு நடைபெறவிருக்கும் அம்னோ பொதுப்பேரவையில் தலைவர் பதவிக்குப் போட்டியிடுவீர்களா எனச் செய்தியாளர்கள் அவரிடம் கேட்டபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த மாதம் சுங்கை பூலோ நாடாளுமன்றத் தொகுதியில் தேர்தல் பிரச்சாரத்தின்போது பேசிய அவர், ஒரு காலத்தில் தாம் அம்னோ தலைவராக வர விருப்பம் கொண்டுள்ளதாகவும் அவர் கூறியிருந்தார்.

எனினும் அவர் எப்போது அந்தத் தலைவர் பதவிக்குப் போட்டியிடுவார் எனக் கூறவில்லை. சுங்கை பூலோ நாடாளுமன்றத் தொகுதியில் தாம் வெற்றிபெற்றால் அம்னோவைத் தாம் சுத்தம் செய்யப்போவதாகவும் அவர் கூறியிருந்தார்.

### அரச மலேசியப் போலீஸ் படைக்கு

# டத்தோ அயூப் கான் தலைமை ஏற்க வேண்டும்



கோலாலம்பூர், டிச. 13-
அரச மலேசியப் போலீஸ் படைக்கு புக்கிட் அமான் போலீஸ் தலைமையகத்தில் போதைப் பொருள் குற்றப் புலனாய்வுப் பிரிவின் இயக்குநராக இருந்துவரும் டத்தோ அயூப் கான் மைடின் பிச்சை நாட்டின் தேசிய போலீஸ் படைத் தலைவராக நியமனம் செய்யப்பட வேண்டுமென வழக்கறிஞர் எங்கு அமாட் ஃபாஸில் எங்கு அலி வலியுறுத்தினார். டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் தலைமையிலான ஒற்றுமை அரசாங்கத்தில் போலீஸ், மலேசிய ஊழல் தடுப்பு ஆணையத்திற்கு உயர்நெறியும் அமலாக்கப் பிரிவில் நீண்ட அனுபவமும் கொண்டவர்கள் தலைமையேற்பது அவசியமாகும் என்றும் அவர் சொன்னார்.

போலீஸ் படை மீதும் மலேசிய ஊழல் தடுப்பு ஆணையம் மீதும் நாட்டு மக்கள் முழு நம்பிக்கை கொள்வதற்கு இந்நடவடிக்கை மிகவும் அவசியம் என்றும் அவர் சொன்னார். டத்தோ அயூப் கான் மைடினை போலீஸ் படைத் தலைவராக நியமனம் செய்தால் அது சரியான ஒரு நடவடிக்கையாகவே அமையும் என அவர் சொன்னார். நேற்று முன்தினம் இரவு புத்ராஜெயாவிலுள்ள ஸ்ரீ பெர்டானாவில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்ட பின்னர் அவர் செய்தியாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கலந்துகொண்டார். கடந்த 1998ஆம் ஆண்டு டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கெஅடிலான் தலைவராக இருந்தபோது கண் பகுதியில் குத்தப்பட்ட சம்பவத்தை அவர் நினைவுகூர்ந்தார், போலீசாரின் தாக்குதலில் அன்வாரே பாதிக்கப்பட்டார்.

இச்சம்பவத்தில் தேசிய போலீஸ் படைத் தலைவரே நேரடியாகச் சம்பந்தப்பட்டிருந்ததாகவும் அவர் கூறினார்.

